# நூல் பல கற்போம்

நாம் தினமும் சுவாசித்துக் கொண்டே இருக்கிறோம். சுவாசிப்பதை நிருத்தினால்!... கற்பனை கூட செய்து பார்க்க முடியாதல்லவா? அதனைப்போல ஏதாவது ஒரு புத்தகத்தை வாசித்துக் கொண்டே இருக்க வேண்டும். சுவாசிப்பது நம் இயல்பு. அதனைப்போல வாசிப்பதையும் நமது இயல்பாக்கிக் கொள்ள வேண்டும்.

பறவைகளின் கூட்டைப் பார்த்திருக்கிறீர்களா!.. முதலில் சிறு குச்சி, இலை, காகிதம் அதற்கு மேல் பஞ்சு போன்ற பொருள், இவையெல்லாம் பறவை தன் குஞ்சிற்காகத் தேடித் தேடி சேகரித்தவை. பறவைகளைப் போல நாமும் விடாமுயற்சியுடன் செயல்பட்டு நல்ல நூல்களைத் தேடித் தேடி படிக்க வேண்டும்.

ஒவ்வொரு நூலும் நமக்கு ஒவ்வொரு நண்பனைப் போலாகும். நூல்களைப் படிக்கப் படிக்க நண்பர்கள் பெருகிக்கொண்டே போவார்கள். நம் தவறுகளைச் சுட்டிக்காட்டி நம்மை நன்னெறிப்படுத்துவார்கள். ஆபத்துக்காலத்தில் மட்டுமல்லாமல் அனைத்து காலத்திலும் உற்ற தோழனாக இருப்பது புத்தகமாகும்.

**மேற்கண்ட பத்தியைப் படித்து வினாக்கேற்ற விடையளி.**

1. எதை நமது இயல்பாகக் கொள்ள வேண்டும்?

2. பறவைகள் தன் குஞ்சிற்காக எவற்றையெல்லாம் சேகரிக்கின்றன?

3. புத்தகங்கள் நமக்கு யாரைப் போன்றவர்கள்?

4. நண்பர்களைப் போல ஆபத்துக் காலத்தில் உதவி செய்வது எது?

5. நீ படித்த புத்தகத்தைப் பற்றி எழுது.